நகர்மன்றம்
உதகமண்டலம்
**15–07–2020.**

அன்புடையீர்,

வணக்கம். இந்நகர்மன்ற ஜுலை **–2020–**ம் மாத அவசரக்கூட்டம் வருகிற **15–07–2020** அன்று காலை **11.00** மணியளவில் தனி அலுவலர், அவர்களின் தலைமையில் கூட்டம் நடைபெறுவதால், மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இத்துடன் கூட்டப் பொருள்கள் இணைக்கப்பட்டுள்ளன.

**தனி அலுவலர்,**
**உதகமண்டலம் நகராட்சி.**

**1.** இந்நகராட்சியில் துப்புரவு ஆய்வாளராக பணிபுரிந்து வந்த திரு.ரா.தங்கமுத்து அவர்களை அயற்பணி அடிப்படையில் திருப்பூர் மாநகராட்சிக்கு மாறுதல் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின், செயல்முறை உத்தரவு ந.க.எண்.**1215**/ஜே/**2015–4** நாள்.**13.08.2015**ல் உத்திரவிடப்பட்டுள்ளதற்கிணங்க அன்னாரை **31.08.2015** பிற்பகல் முதல் இந்நகராட்சி பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு தற்போது திருப்பூர் மாநகராட்சியில் அயற்பணி அடிப்படையில் பணியாற்றி வரும் திரு.ரா.தங்கமுத்து அவர்கள் தன்னை திருப்பூர் மாநகராட்சியிலேயே நிரந்தரமாக பணியமர்த்த அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார். இதனை தொடர்ந்து அரசு துணை செயலாளர் அவர்களின் கடிதம்.எண் **10434**/மா.ந.**6.2020–1**, நாள்.**06.07.2020**ல் இந்நகர்மன்றத்தின் தடையின்மை சான்று கோரப்பட்டுள்ளது.

எனவே, திரு.ரா.தங்கமுத்து அவர்களை திருப்பூர் மாநகராட்சியிலேயே நிரந்தரமாக பணியமர்த்த இந்நகராட்சிக்கு தடையேதுமில்லை என சான்று வழங்குவது குறித்து தனி அலுவலரின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு:-

1. **அனுமதி வழங்கலாம்.**
2. **திரு.ரா.தங்கமுத்து துப்புரவு ஆய்வாளர் அவர்களை திருப்பூர் மாநகராட்சிலேயே நிரந்தரமாக பணியமர்த்த இந்நகராட்சிக்கு தடையேதுமில்லை என சான்று வழங்கலாம்.**

**(ந.க.எண்.எச்1/5680/2020)**

**தீர்மானம் எண். 2190 அனுமதி வழங்கப்பட்டது.**



**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,**
**உதகமண்டலம் நகராட்சி.**

நகர்மன்றம்
உதகமண்டலம்
**31–07–2020.**

அன்புடையீர்:

வணக்கம். இந்நகராட்சியின் ஜுலை **2020–ம்** மாத சாதாரண கூட்டம் வருகிற **31.07.2020** அன்று காலை **11.00** மணியளவில் தனி அலுவலர், அவர்களின் தலைமையில் கூட்டம் நடைபெறுவதால், மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இத்துடன் கூட்டப் பொருள்கள் இணைக்கப்பட்டுள்ளன.

**தனி அலுவலர்,**
**உதகமண்டலம் நகராட்சி.**

**1.** தீட்டுக்கல் உரக்கிடங்கில் இயங்கி வரும் இயந்திர அறையில் மேற் கூரை மிகவும் பழுதடைந்துள்ளது. இந்த அறையில் Incenerator, Shredder machine, Bailing machine ஆகியவை பொருத்தப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது. மேலும் நகரப் பகுதிகளிலிருந்து வரும் குப்பைகளை பிளாஸ்டிக், இரும்பு, பேப்பர், பாட்டில் ஆகியவற்றை தரம் பிரித்து தனித்தனியாக நகராட்சி ஆட்கள் மூலம் மறு சுழற்சிக்கு அனுப்பப்படுகிறது. உரக்கிடங்கில் இயந்திரங்கள் இயக்கவும் குப்பைகளை பிரிக்கவும் சுமார் **50** பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். தற்பொழுது இயந்திர அறையில் மேற் கூரை மிகவும் பழுதடைந்துள்ளதால் மழை காலங்களில் பணியாளர்கள் பணிபுரிவது மிகவும் சிரம்மாக உள்ளது. எனவே பழுதடைந்துள்ள இயந்திர அறையின் மேற் கூரையை பழுது நீக்கம் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.22.00/– இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொது நிதி/திட்ட நிதியில் பணி மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது. கூட்டப் பொருள் வரைவு ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு :–**

1. **அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். இ5/005937/2020)**
**தீர்மானம் எண். 2191 அனுமதி வழங்கப்பட்டது.**

**2.** இந்கராட்சி **2019–2020** ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டிற்கு ஒப்பந்ததாரர்கள் மற்றும் பணியாளர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட வருமான வரி தொகையினை TDS Filling செய்து Form 16 (ம) Form 16Q வழங்கிய வகையில் தொகை ரூ.5,570/–யை M/S SV Consultant நிறுவனத்திற்கு வழங்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
**(ந.க.எண். பி4/5440/2020)**
**தீர்மானம் எண். 2192 அனுமதி வழங்கப்பட்டது.**

**3.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட காந்தல் கழிவு நீரேற்றும் நிலையத்தில் Aeration Motor, Gear Box ல் உள்ள முக்கிய பாகங்கள் Gear Box Coupling Tyre Coupler, Mechanical Oil Seal,

Motor Thermal Block Bus Bar Connector 63 Amps, Overload Relay Unit ML2 Contactor, Single Phase Prevents, No Volt Coil For Starter Contactor ஆகியவை பழுதடைந்துள்ளதால் அடிக்கடி மோட்டார் இயக்க இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே மேற்கண்ட பொருட்களை வாங்கி பழுதடைந்துள்ள பாகங்களை புதுப்பிக்கவும் Gear Box Lubrication Oil 320 grade வாங்கி மோட்டார்களை பராமரிப்பது மிகவும் அவசியமானதாகும். எனவே பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2,00,000/—க்கு பணியினை நகாட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணியினை மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :—

1. **அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்கண்ட பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண். இ5/005955/2020)**

**தீர்மானம் எண். 2193 அனுமதி வழங்கப்பட்டது.**

**4.** உதகமண்டலம் நகராட்சியின் 2019—2020ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை தனி அலுவலரின் பார்வைக்கும் ஒப்புதலுக்காகவும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :—

**தனி அலுவலர் ஒப்புதல் வழங்கலாம்.**

**(ந.க.எண். சி1/4997/2020)**

**தீர்மானம் எண். 2194 அனுமதி வழங்கப்பட்டது.**

**5.** தீட்டுக்கல் குப்பைகிடங்ககை ஆய்வு செய்ய பசுமை தீர்பாயம் குழுவினர் வருகை புரிந்தபோது, இந்நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளிலும் சேகரமாகும் குப்பை கழிவுகளை கொண்டு செல்லும் பொது நல பிரிவு வாகனங்களின் சேகரிக்கப்படும் குப்பைகள் காற்றின் மூலம் பறந்து சாலைகளில் கொட்டாதவாறு வலை அமைக்க தெரிவித்துள்ளார். பொது நல பிரிவில் குப்பைகளை சேகரிக்க பயன்படுத்தப்படும் 25 வாகனங்களுக்கு வலை வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.90,000/— ஐ இந்நகராட்சியின் பொது நிதியிலிருந்து மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மேற்கொள்ள தனி அலுவலரின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு :—

**பணியின் அவசர அவசியம் கருதி 25 வாகனங்களுக்கு வலைகள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினத்தை Sec 15ன் கீழ் பொது நிதி மற்றும் திடக்கழிவு மேலாண்மை சேவைக் கட்டணம் ஆகியவற்றிலிருந்து வழங்க தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். எப்1/11396/2017)**

**தீர்மானம் எண். 2195 அனுமதி வழங்கப்பட்டது.**

**6.** இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கும் வாககம் TN43E6517க்கு பழுது பணிகள் நிவிர்த்தி செய்ய விண்ணப்பித்துள்ளார். பழுது பணிகள் மேற்கொள்ள வேண்டிய அவசர அவசியம் கருதி பழுது பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.1,50,000/—ஐ வருவாய் மற்றும் மூலநிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :—**

**பழுது பணிகள் அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். எச்2/12428/2019)**

**தீர்மானம் எண். 2196 அனுமதி வழங்கப்பட்டது.**

**7.** இந்நகராட்சிக்கு 2019—20 ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டு திட்ட நிதியின் கீழ் (IUDM) தீட்டுக்கல் உரக்கிடங்கில் உள்ள பழைய குப்பைகளை பயோ—மைனிங் முறையில் அப்புறப்படுத்தும் பணிக்கு ரூ.856.76க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு அரசு ஆணை (20) எண்.39 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்.28.05.2020இன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு, தலைமை பொறியாளர், நகராட்சிகளின் நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல் முறைகள் கடித ந.க.எண். 18281/2016/DO1 நாள்.02.06.2020ன் படி தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள 08.07.2020 அன்று ஒப்பந்தபுள்ளிகள் கோரியதில் கீழ்காணும் நபர்களிடம் இருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் புள்ளிகளின் விவரப்படி

| வ.எண். | ஒப்பந்ததாரரின் விபரம் | தொழில்நுட்ப ரீதியில் தகுதி விபரம் |
|---|---|---|
| 1 | திருவாளர்கள் சுசி இண்டஸ்ட்ரீஸ் பிளாட் எண்.2, பேஸ் 1, அக்ராஹாரம் தெரு பொன்னியம்மன் நகர் அயனம்பாக்கம் சென்னை—600 095 | தகுதிபெற்றது |
| 2 | திருவாளர்கள் எஸ்.எஸ். கிரீன் எனர்ஜி, 75 எம்.ஜி.ஆர் நகர், சீலநாயக்கன்பட்டி, சேலம் — 636 201 | தகுதி பெறவில்லை |
| 3 | திருவாளர்கள். நெப்டியூன் ஆட்டோமேஷன் RSF No. 83/3, 84/1, A1, வாய்க்கால் சாலை, பள்ளிபாளையம், நசியனூர் போஸ்ட், ஈரோடு – 638 107 | தகுதி பெறவில்லை |
| 4 | திருவாளர்கள் ராஜ் இண்டஸ்ட்ரீஸ், எண்.70 பசுபன் நகர், காலைக்குப்பம், அம்பத்தூர், சென்னை – 600 053 | தகுதி பெறவில்லை |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற நான்கு ஒப்பந்த புள்ளிகளில் தொழில்நுட்ப ரீதியாக தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளியான திருவாளர்கள் சுசி இண்டஸ்ட்ரீஸ், சென்னை அவர்களது ஒப்பந்த புள்ளியுடன் கடந்த 13.07.2020 ஆம் தேதி வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி விலை விபர உரை கவரினை நகராட்சி ஒப்பந்த குழு முன்னிலையில் திறந்து விலை விபரத்தினை மதிப்பீடு தொகையுடன் ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டை விட 7.20% கூடுதலான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளியினை வழங்கியுள்ளார்.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1 | நகராட்சி தீட்டுக்கல் உரக்கிடங்கில் பயோ–மைனிங் முறையில் குப்பைகளை பிரித்து எடுத்தல் மற்றும் நிலம் சரிசெய்யும் பணி. | 856.76 |

மேற்படி பணிக்கு அது முதல் முறை ஒப்பந்தபுள்ளி அழைப்பு என்பதாலும் தனித்த ஒப்பந்தப்புள்ளியாக இருப்பதால் ஒப்பந்தபுள்ளியின் விலை விபரத்தினை மதிப்பீட்டு விலை விபரத்திதிறகு குறைத்து தர கோரி இவ்வலுவலக கடித ந.க.எண்.இ4/4736/2019 நாள். 14.07.2020ல் கோரியத்தில் ஒப்பந்ததாரர் தனது 20.07.2020ம் தேதிய கடிதத்தில் உதகமண்டலம் நகராட்சி மற்ற நகராட்சி போல் இன்றி மலை பிரதேசத்தில் உள்ள நகராட்சியாக உள்ளதாலும், ஆண்டின் பெரும்பான்மையான நாட்களில் மழை பொழிவு உள்ளதாலும், வெப்பநிலை குறைவாக உள்ளதாலும், குளிர்கால சூழ்நிலையே பெருமளவு உள்ளதாலும், தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் (தென்மண்டல அமர்வு) மாண்புமிகு நீதிபதி டாக்டர்.P.ஜோதிமணி அவர்களால் 01.02.2020 அன்று ஆய்வில் தெரிவிக்கப்பட்ட வழிமுறையின்படி உரிய காலத்தில் அனைத்து குப்பைகளையும் அகற்ற வேண்டிய அவசியம் உள்ளதாலும் பல ஆண்டுகளாக தேக்கி வைக்கப்பட்ட குப்பைகளை கையாளுவதில் சிரமம் உள்ளதாக குறிப்பிட்டு ஒப்பந்தப்புள்ளியின் விலையினை குறைத்து கொடுத்த பின்னர் ஒப்புநோக்கியதில் ஒப்பந்தபுள்ளியின் விலை விபரம் 4.93 சதவிகிதம் மதிப்பீட்டினை விட கூடுதலான தொகை வரப்பெறுவதினால் கீழ்காணும் விபரப்படியான ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்யவும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரரின் விபரம் | ஒப்பந்த புள்ளியில் குறிப்பிட்டுள்ள விலை விபரம் | | விலை குறைப்பு செய்த பின்னர் குறிப்பிட்டுள்ள விலை விபரம் | |
|---|---|---|---|---|---|
| | | விலை/ க.மீ | மதிப்பீட்டு சதவீதம் | விலை/ க.மீ | மதிப்பீட்டு சதவீதம் |
| 1 | திருவாளர்கள் சுசி இண்டஸ்ட்ரீஸ் பிளாட் எண்.2, பேஸ் 1, அக்ராஹாரம் தெரு பொன்னியம்மன் நகர் அயனம்பாக்கம் சென்னை– 600 095 | 685.00 | 7.20% சதவிகிதம் மதிப்பீட்டை விட கூடுதல் | 670.50 | 4.93% சதவிகிதம் மதிப்பீட்டை விட கூடுதல் |

அலுவலக குறிப்பு

a) மேற்படி பணிக்க வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களில் தொழில் நுட்ப ரீதியில் தகுதியான ஒப்பந்ததாராக திருவாளர்கள் சுசி இண்டஸ்ட்ரீஸ், சென்னை அவர்களது ஒப்பந்தபுள்ளியில் குறிப்பிட்டுள்ள விலை விபரம் ரூ.685.00/– கனமீட்டருக்கு என குறிப்பிட்டுள்ளதை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு தொகையினை விட கூடுதலாக 7.20 சதவிகிதம் வரப்பெற்றதினால் மேற்படி ஒப்பந்தப்புள்ளி அழைப்பு முதல் அழைப்பு

ஒப்பந்தப்புள்ளி என்பதாலும் தனித்த ஒப்பந்தப்புள்ளியென்பதாலும் ஒப்பந்தபுள்ளியின் விலை விவரத்தினை குறைத்து தரக்கோரியத்தில் ஒப்பந்ததாரர் தனது 20.07.2020 தேதிய கடிதத்தில் உதகை நகராட்சி அமைந்துள்ள அமைவிடம் மற்றும் தட்பவெப்ப நிலை குறித்து ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள விலையான ரூ.685.00/– கனமீட்டருக்கு என குறிப்பிட்டுள்ளதை ரூ.670.50/– கனமீட்டருக்கு குறைத்து கொடுத்துள்ளார். அதன்படி ஒப்பந்தப்புள்ளியின் விலை விபரம் மதிப்பீட்டு தொகையில் 7.20 சதவீதம் கூடுதல் தொகையிலிருந்து 4.93 சதவீதத் கூடுதல் தொகைக்கு குறைத்து கொடுத்துள்ளார்.

மேலும் மேற்படி பணிக்கு முதல் அழைப்பு ஒப்பந்தப்புள்ளி என்பதாலும் பணியின் தன்மை மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டு சிறப்பினமாக கருதி விலை குறைப்பிற்கு பின் ஒப்பந்தப்புள்ளிளியன் விலை விகிதம் மதிப்பீட்டு தொகையினை விட கூடுதல் தொகை நகர் மன்ற அதிகார வரம்பிற்கு உட்பட்ட 5 சதவிகித தொகைக்குள் இருப்பதாலும் தற்போது மேற்படி பணிக்கு திருத்திய விலை விபரம் வரப்பெற்றுள்ளதால் ஒப்பந்தபுள்ளியினை ரத்து செய்துவிட்டு மறு ஒப்பந்தப்புள்ளி கோர நேரிட்டால் திருத்திய விலை விவரப்படி திருத்திய மதிப்பீடு தயார் செய்து ஒப்பந்தப்புள்ளி கோர நேரிடுமானல் அதன்படி 20% கூடுதல் தொகையாக மதிப்பீடு தொகை வரப்பெறும். மேலும் தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் (தென்மண்டல அமர்வு) மாண்புமிகு நீதிபதி டாக்டர்.P.ஜோதிமணி அவர்களால் 01.02.2020 அன்று ஆய்வில் தெரிவிக்கப்பட்ட வழிமுறையின்படி உரிய காலத்தில் மேற்படி குப்பைகளை அகற்ற பணியினை மேற்கொள்ள வேண்டியதின் அவசியத்தை கருத்தில் கொண்டும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் காலதாமதம் மற்றும் கூடுதல் மதிப்பீட்டு செலவீனம் ஏற்படும். எனவே பணியின் தன்மை மற்றும் அவசியத்தினை முன்னிட்டு சிறப்பினமாக கருதி கூடுதலான மதிப்பீட்டு தொகை நகர்மன்ற அதிகார வரம்பிற்கு உட்பட்டு இருப்பதால் பணியினை உடன் மேற்கொள்ள திருவாளர்கள் சுசி இண்டஸ்ட்ரீஸ், சென்னை அவர்களது விலைகுறைப்பின் படி (ரூ.685.00/– கனமீட்டருக்கு) என குறிப்பிட்டுள்ளதின் படி (ரூ.670.50/– கனமீட்டருக்கு) என குறிப்பிட்டுள்ளதின் படி 4.93 சதவிகிதம் மதிப்பீட்டினை விட கூடுதல் தொகையுடைய ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க நகர்மன்றத்தின் தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.

b) ஒப்பந்தாரர் திருவாளர்கள் சுசி இண்டஸ்ட்ரீஸ், சென்னை அவர்களது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கலாம்.

c) கூடுதலான மதிப்பீட்டு தொகையுடைய ஒப்பந்தபுள்ளியினை ஏற்றுக்கொள்வதினால் ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ.41,34,060 யை நகராட்சி நிதி நிலையினை கருத்தில் கொண்டு அரசின் திட்ட நிதியிலிருந்து கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்று செலவினத்தினை மேற்கொள்ளலாம், அல்லது அரசின் நிதி ஒதுக்கீட்டினை எதிர்நோக்கி நகராட்சி பொது நிதியிலிருந்து செலவீனத்தினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். இ4/4736/2019)**
**தீர்மானம் எண். 2197 அனுமதி வழங்கப்பட்டது.**

**8.** இந்நகராட்சி 10.02.2020 முதல் 06.07.2020 வரை அவசர அவசியம் கருதி மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் மேற்கொண்ட கீழ்கண்ட செலவினங்களுக்கு தனி அலுவலர் பார்வைக்கும். பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | செலவின விபரம் | தொகை |
|---|---|---|
| 321 | பௌட்டா சேனல் மற்றும் நீர் தொட்டி ஆகியவற்றுக்கு பராமரிப்பு மற்றும் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொண்டது. | ரூ.4,00,000/– |
| 322 | பேருந்து நிலையம் அருகில் இருக்கும் அம்மா உணவகத்திற்கு குக்கர் மற்றும் பாத்திரங்கள் | ரூ.1,19,970/– |
| 323 | மேற்பரப்பை சமன் செய்ய உரம் முற்றத்தில் சரயை வழங்கியது | ரூ.4,26,269/– |
| 324 | கம்போஸ்ட் பகுதியில் கழிவரை அமைப்பு ஏற்படுத்தல் தொடர்பாக | ரூ.2,46,311/– |
| 31.03.2020 முடிய 01.04.2020 முதல் | | |
| 1 | கோவிட் 19 க்கான நகராட்சி வாகனங்களில் தெளித்தல் ஏற்பாடுகளை வழங்குதல் | ரூ.2,81,242/– |
| 2 | கோவிட் 19 விழிப்புணர்வு திட்டத்திற்கான IEC நடவடிக்டிககள் | ரூ.42,000/– |
| 3 | கொரோனா வைரஸ் படம் மற்றும் விழிப்புணர்வு எமல்ஷன் வண்ணப் பூச்சுகளுடன் சுவர்களை ஓவியம் செய்தது | ரூ.48,972/– |
| 4 | அழுத்தம் பம்பை சரி செய்தல் மற்றும் புதிய அழுத்தம் பம்பை வாங்குதல் | ரூ.42,336/– |
| 5 | TN43J4653 வாகனத்திற்கு தெளித்தல் ஏற்பாடுகளை வழங்குதல் | ரூ.69,720/– |

அலுவலக குறிப்பு :–

**தனி அலுவலர் பதிவு செய்யலாம்.**

**(ந.க.எண். பி4/6920/2016)**

**தீர்மானம் எண். 2198 அனுமதி வழங்கப்பட்டது.**

**9.** உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பாட்னா ஹவுஸ் பகுதியில் சுமார் 100 குடும்பங்கள் உள்ளதால் அச்சாலையில் உள்ள குறுக்கு சாலை பகுதியில் தெருவிளக்கு வசதிகள் இல்லாத காரணத்தினால் இரவு நேரங்களில் பொதுமக்கள் செல்வதற்கு பாதிப்பு ஏற்படுகிறது. எனவே அப்பகுதியில் 8 மின் கம்பங்கள் உள்ளதால் அதில் தெருவிளக்குகள் அமைப்பதற்கு தேவையான மதிப்பீட்டுகள் கோரி தமிழ்நாடு மின்சார வாரியம் உதகை அவர்களுக்கு தெரிவித்தன் பேரில் ரூ.30,660/–ஐ செலுத்த தமிழ்நாடு மின்சார வாரியத்திடமிருந்து கேட்பு வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை 7 நாட்களுக்குள் செலுத்துமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளதால் மேற்படி தொகையினை செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :—

அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் தொகையினை செலுத்தலாம்.

**தீர்மானம் எண். 2199 அனுமதி வழங்கப்பட்டது.**

**10.** இந்நகராட்சிக்குட்பட்டட வார்டு எண்.1 எச்பிஎப் பகுதியில் NH சாலை சந்திப்பிலிருந்த முனிஸ்வரன் கோயில் வரை கடந்த 7 வருடங்களுக்கு முன்பு சாலை புதுப்பிக்கப்பட்டது. தற்போது இந்த நடைபாதையானது மழையினால் மிகவும் பழுதடைந்து குண்டும் குழியாக உள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் நடந்து செல்லவும், இரு சக்கர வாகனம் செல்லவும் மிகவும் சிரமமாக உள்ளது. எனவே மேற்கண்ட இடங்களில் நடைபாதைகளை சீரமைக்க வேண்டியது அவசியமாகும். எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.11,00,000/—க்கு பொது நிதியின் கீழ் பணி செய்ய தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

குறிப்பு :—

**மேற்கண்ட பணிக்காக செலவினை நகராட்சி பொது நிதியின் கீழ் செலவிட அனுமதிக்காக.**

அலுவலக குறிப்பு :—

**அனுமதிக்கலாம்.**

**தீர்மானம் எண். 2200 அனுமதி வழங்கப்பட்டது.**

**11.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பஸ் நிலையம் மற்றும் அரசு மருத்துவமனை அருகில் உள்ள அம்மா உணவகங்களில் பாதுகாப்பு நலன் கருதி கண்காணிப்பு கேமரா கருவி பொருத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.2,30,000/—க்கு பணியினை நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :—

1. **அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**

   **தீர்மானம் எண். 2201 அனுமதி வழங்கப்பட்டது.**

**12.** இந்நகராட்சியின் தினசரி சந்தை கடந்த 23.06.2020 அன்று அதிகலை 12.30 மணியளவில் ஒரு தேனீர் கடையில் ஏற்பட்ட தீ விபத்தினால் அருகாமையில் அமைந்துள்ள 81 கடைகள் தீக்கிறையாகி முழுமையாக எரிந்துள்ளன, எனவே மேற்படி (பிளாக் 3 முதல் பிளாக் 7 வரை) பிளாக் — 3 கடை எண். 39 முதல் 44 (6 கடைகள்) பிளாக்— 4 கடை எண். 45 முதல் 50 வரை (6 கடைகள்) (பிளாக் — 5) கடை எண். 51 முதல் 54 வரை (6 கடைகள்) பிளாக் — 6 கடை எண். 55 முதல் 70 வரை (16 கடைகள்) பிளாக் — 7 கடை எண். 71 முதல் 77 வரை (7 கடைகள்) மொத்தம் 39 கடைகள் புதுப்பிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.24.90/— இலட்சம் ஆகும். மேற்படி கடைகளை உடனே சீரமைப்பது அவசியமானதால் பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி பணியினை நகராட்சி பொது நிதி / திட்ட நிதியில் பணி மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகராட்சி ஆணையர்(ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணி மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
   தீர்மானம் எண். 2202 அனுமதி வழங்கப்பட்டது.

13. இந்நராட்சியின் தினசரி சந்தை கடந்த 23.06.2020 அன்று அதிகாலை 12.30 மணியளவில் ஒரு தேனீர் கடையில் ஏற்பட்ட தீ விபத்தினால் அருகாமையில் அமைந்துள்ள 81 கடைகள் தீக்கிரையாகி முழுமையாக எரிந்துள்ளன. எனவே மேற்படி (பிளாக் 1, 2 மற்றம் 8 வரை) பிளாக் – 1ல் கடை எண். 1 முதல் 14 (14 கடைகள்) பிளாக்– 2ல் கடை எண். 15 முதல் 38 வரை (24 கடைகள்) (பிளாக் – 8ல்) கடை எண். 78 முதல் 81 வரை (4 கடைகள்) மொத்தம் 42 கடைகள் புதுப்பிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.24.95/– இலட்சம் ஆகும். மேற்படி கடைகளை உடனே சீரமைப்பது அவசியமானதால் பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி பணியினை நகராட்சி பொது நிதி / திட்ட நிதியில் பணி மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகராட்சி ஆணையர்(ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணி மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
   தீர்மானம் எண். 2203 அனுமதி வழங்கப்பட்டது.

14. இந்நகராட்சியின் De-sitting Auto FC பணிக்கு தேவையான பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை செய்ய 29.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்க ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு கூட்டத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை லட்சத்தில் |
|---|---|---|
| 1 | இந்நகராட்சி வாகனம் TN43C7391 ற்க்கு தகுதி சான்று பெறவும் மற்றும் பழுதுகள் சரி செய்யும் பணி | ரூ.1.00/– |

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்ததாரார் பெயர்கள் மற்றும் சதவிகிதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|

| | | கோரியுள்ள ஒப்பற்றதாரரின் பெயர் |
|---|---|---|
| 1 | Nilgiri Auto Garage, Mettupalayam Rs.99,000/- | Nilgiri Auto Garage, Mettupalayam Rs.99,000/- |
| 2 | Mettupalayam Auto Service, Trippur Rs.1,01,500/- | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலர் ஏற்கலாம்.

அலுவலக குறிப்பு :–

1. **தனி அலுவலர் ஏற்கலாம்.**
2. **குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கலாம்.**
   **(ந.க.எண் இ4/4947/2020)**
   **தீர்மானம் எண். 2204 அனுமதி வழங்கப்பட்டது.**

**15.** இந்நகராட்சியின் குடிநீர் வாகனத்திற்கு நடப்பாண்டிற்கான தகுதிச்சான்று பெற தேவையான பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள **29.07.2020** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு கூட்டத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை லட்சத்தில்** |
|---|---|---|
| 1 | இந்நகராட்சி குடிநீர் வாகனம் TNN6380 றக்கு தகுதி சான்று பெறவும் மற்றும் பழுதுகள் சரி செய்யும் பணி | ரூ.1.72/– |

| **வ.எண்.** | **ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்ததாரார் பெயர்கள் மற்றும் சதவிகிதம்** | **குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பற்றதாரரின் பெயர்** |
|---|---|---|
| 1 | Primier Auto Garage, Mettupalayam, Cbe Rs.1,75,000/- | Sampath Auto Garage, Coimbatore Rs.1,71,600/- |
| 2 | Sampath Auto Garage, Coimbatore Rs.1,71,600/- | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலர் ஏற்கலாம்.

அலுவலக குறிப்பு :–

1. தனி அலுவலர் ஏற்கலாம்.
2. குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கலாம்.
   (ந.க.எண் இ4/4947/2020)
   தீர்மானம் எண். 2205 அனுமதி வழங்கப்பட்டது.

16. இந்நகராட்சியின் தெரு விளக்கு பராமரிப்பு வாகனத்திற்கு தகுதிச்சான்று பெறுவதற்கு தேவையான பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை செய்ய 29.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்க ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு கூட்டத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை லட்சத்தில் |
|---|---|---|
| 1 | இந்நகராட்சி தெரு விளக்கு பராமரிப்பு வாகனம் TN43K4399 ற்க்கு தகுதி சான்று பெறவும் மற்றும் பழுதுகள் சரி செய்யும் பணி | ரூ.1.04/– |

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்ததாரார் பெயர்கள் மற்றும் சதவிகிதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பற்ததாரரின் பெயர் |
|---|---|---|
| 1 | Nilgiri Auto Garage, Mettupalayam Rs.1,03,500/- | Nilgiri Auto Garage, Mettupalayam Rs.1,03,500/- |
| 2 | Mettupalayam Auto Service, Trippur Rs.1,06,600/- | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலர் ஏற்கலாம்.

அலுவலக குறிப்பு :–

1. தனி அலுவலர் ஏற்கலாம்.
2. குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கலாம்.
   (ந.க.எண் இ4/4264/2020)
   தீர்மானம் எண். 2206 அனுமதி வழங்கப்பட்டது.

17. இந்நகராட்சியின் குநீர் வாகனத்திற்கு தகுதிச்சான்று பெறுவதற்கு தேவையான பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை செய்ய 29.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற

ஒப்பந்தப்புள்ளிகளுக்க ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு கூட்டத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை லட்சத்தில் |
|---|---|---|
| 1 | இந்நகராட்சி குடிநீர் வாகனம் TN43 3043ற்க்கு தகுதி சான்று பெறவும் மற்றும் பழுதுகள் சரி செய்யும் பணி | ரூ.2.60/– |

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்ததாரார் பெயர்கள் மற்றும் சதவிகிதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பற்ததாரின் பெயர் |
|---|---|---|
| 1 | Lakshmi Auto Diesel works, Mettur Rs.2,59,965/- | Lakshmi Auto Diesel works, Mettur Rs.2,59,965/- |
| 2 | JothiMurugan Motors works, Salem Rs.2,64,500/- | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலர் ஏற்கலாம்.

அலுவலக குறிப்பு :–

1. **தனி அலுவலர் ஏற்கலாம்.**
2. **குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கலாம். (ந.க.எண் இ4/3843/2020)**
   **தீர்மானம் எண். 2207 அனுமதி வழங்கப்பட்டது.**

18. அரசு ஆணை எண்.101 நாள்.30.04.1997ன் இந்நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட தூய்மை பணியாளர் பணியிடங்கள் தேர்வு செய்யப்பட்டடது 321 ஆகும். 2018–2019–ம் நிதி ஆண்டில் காலியாக உள்ள தூய்மை பணியாளர் பணியிடங்களுக்கு 150 நபர்கள் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் வெளிக்கொணர்வு பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 31.07.2018 முதல் 30.07.2020 வரை ஒய்வு பெற்ற தூய்மை பணியாளர் பணியிடங்கள் 10 எண்ணிக்கை காலியாக உள்ளது. இப்பணிடங்களை ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் K.Dis.No. 26356/P3/2018 நாள். 05.10.2018ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.


இந்நகராட்சி கோடை வாசஸ்தலாமாக உள்ளதாலும், முக்கிய பிரமுர்கள், வெளி நாட்டு சுற்றுலா பயணிகள் மற்றும் சுற்றுலா பயணிகள் வந்த வண்ணம் உள்ளதால் நகரை தூய்மையான வைத்திருப்பது மிகவும் இன்றியமையாத பணியாக உள்ளதாலும், தற்போது கொரோனா நோய் தொற்று அதிகமாக பரவி வருவதாலும் மேற்படி அத்தியாவசிய பணிகளை மேற்கொள்வது இன்றியமையாத பணியாக உள்ளதாலும், தனியார் ஒப்பந்ததாரர்கள் மூலம் கூடுதலாக 10

வெளிக்கொணர் பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ள 89 நாட்களுக்கு ஒப்பந்த புள்ளி கோரவும் அதற்கு ஆகும் உத்தேச செலவினம் (மாவட்ட ஆட்சித் தலைவர் உதகை அவர்களால் 2019–2020ம் நிதியாண்டில் செயல்தினற்ற பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ.614/–, ESI–1.75%, GF– 12% மற்றும் நிர்வாக செலவினம் 10% ஆகியவை உள்ளடக்கி மொத்தம் ரூ.760/–) ரூ.7.00 லட்சத்திற்கும் தனி அலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்தும், கொரோனா தொற்று தீவிரமடைந்துள்ள காரணத்தினால் 10 வெளிக்கொணர்வு பணியாளர்களை ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்ததாரர்கள் மூலம் பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
2. இதற்காகும் செலவினத்தினை இந்நகராட்சியின் பொது மற்றும் SUC நிதியிலிருந்தும் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
3. தனியார் ஒப்பந்ததாரர் மூலம் 10 வெளிக்கொணர் பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் எச்1/6123/2020)
தீர்மானம் எண். 2208 அனுமதி வழங்கப்பட்டது.



ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,
உதகமண்டலம் நகராட்சி.